சிகரத்தின்

# தினத் தென்றல்

SIGARATTHIN DHINATHENDRAL | தமிழ் சமுதாயத்தின் குரல் | TAMIL DAILY Rs. 4

Vol:13 • Issue:259 07.10.2026 • புதன்கிழமை • சென்னை • திருவள்ளூர் • காஞ்சிபுரம் • கோவை 4 • பக்கம் • விலை ரூ.4






**அடுத்தடுத்து அம்பலமாகிறது 'தூய சக்தி' தவெகவின் ஊழல்கள்**

**தவெக அரசின் துரோகத்திற்கு செவிலியர்கள்தான் தற்போதைய இரையா?**

**கேப்டன் பொறுப்பில் இருந்து ஹர்மன்பிரீத் விலகல்**












## மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில்

# இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நிறைவு!

**சென்னை, அக்.07:** தமிழகத்தில் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளில் இடைத்தேர்தல் வாக்குப்பதிவு இன்று காலை 7 மணி தொடங்கி மாலை 6 மணியுடன் நிறைவுபெற்றது. இந்நிலையில் மதுராந்தகத்தில் 85.90%, தாராபுரத்தில் 80.31% வாக்குப்பதிவாகி உள்ளது என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது

வரும் 9-ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேல் (தவெக), பரந்தாமன் (திமுக), கணிதா சம்பத் (அதிமுக), சுகந்தி (மார்க்சிஸ்ட்), ஜானகிராமன் (நாம் தமிழர்) மற்றும் சுயேட்சைகள் உட்பட 27 பேர் களத்தில் உள்ளனர்.

அதே போல், தாராபுரம் தொகுதியில் சத்யபாமா (தவெக), சுகன்யா (திமுக), பானுமதி (அதிமுக), லட்சுமணன் (சிபிஐ), கார்த்திகா (நாதக) உட்பட 22 பேர் போட்டியிடுகின்றனர்.

தாராபுரம் இடைத்தேர்தலில் வாக்களித்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தவெக வேட்பாளர் சத்யபாமா, ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவேன் என நம்பிக்கை தெரிவித்தார்.

அதிமுக வேட்பாளர் பானுமதி வாக்களித்த பின்னர் அளித்த




பேட்டியில், "தாரா புரம் எப்போதும் அதிமுகவின் கோட்டை. அதிமுக வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது" என்றார்.

புதுச்சேரியில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில், மங்கலம், தட்டாஞ்சாவடி என இரு தொகுதிகளில் போட்டியிட்டு வென்ற முதல்வர் ரங்கசாமி, தட்டாஞ்சாவடி தொகுதியை ராஜினாமா செய்தார். இதையடுத்து இடைத்தேர்தல் அட்டவணையை கடந்த மாதம் 7-ம் தேதி அதிகாரப்பூர்வமாக தலைமைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டது. அதன்படி நேற்று (அக்.6) இடைத்தேர்தல் காலை 7 மணிக்கு தொடங்கியது.

தட்டாஞ்சாவடி தொகுதியில் அரசியல் கட்சிகள் சார்பில் 6 பேரும், சுயேச்சைகளாக 5 பேரும் மொத்தமாக 11 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இதில் என்.ஆர். காங்கிரஸ் வேட்பாளர் அசோக் ஆனந்த், காங்கிரஸ் வேட்பாளர் விநாயகம், திமுக வேட்பாளர் சேது செல்வம், இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் அ.மு.சலீம் ஆகியோருக்கு இடையே போட்டி நிலவுகிறது.

இந்நிலையில், தட்டாஞ்சாவடியில் மாலை 6 மணி நிலவரப்படி 80.81% வாக்குப்பதிவாகியுள்ளது. மொத்தமுள்ள 31 வாக்குச்சாவடிகளில் கவுண்டம்பாளையம் முத்துரத்தின அரங்கம் மேல்நிலைப்பள்ளி பூத், வினோபாநகர் பொய்யாகுளம் கம்யூனிட்டி ஹால் அரங்கு ஆகிய பூத்கள் பதற்றமானவையாக கண்டறியப்பட்டன. அதனால், இங்கு கூடுதல் பாதுகாப்பு போடப் பட்டிருந்தது .

மேற்கு வங்கத்தில் ரெஜிநகர் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் 79.85%, நந்திகிராம் தொகுதியில் 80.67% வாக்குகளும் பதிவாகியுள்ளது.

அசாம் மாநிலம் நாகோன் மக்களவை தொகுதியில் 76.10%, வாக்குகள் பதிவாகியுள்ளது.

# சதிகார தவெக அரசை இனி எப்படி நம்புவது?

## நயினார் நாகேந்திரன் காட்டம்



**சென்னை, அக்.07:** 'எம்எல்ஏ-க்களுக்கு கார் கொடுப்பதில் அவசரம் காட்டும் தவெக அரசு, செவிலியர்களின் பணி நியமனத்துக்கு மட்டும் அவகாசம் கேட்பது ஏன்? சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என பொய்களில் புரளும் தவெக அரசு, செவிலியர்களிடம் நவம்பர் 3 வரை அவகாசம் கேட்டு, இந்த பிரச்சினையை கிடப்பில் போட முயல்கிறதா?' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தேர்தலின் போது, "ஆட்சிக்கு வந்த முதல் நாளே தற்காலிக செவிலியர்களை பணி நிரந்தரம் செய்வோம்" என்று கூறிவிட்டு, நேற்று பணி நிரந்தரம் கோரி அமைதியான வழியில் போராடிய ஆயிரக்கணக்கான செவிலியர்கள் மீது, அடக்குமுறையை ஏவிய பித்தலாட்ட தவெக அரசை, "பெண்களுக்கு பிரச்சினை என்றால் சும்மா இருக்க மாட்டேன்" என்று வீர வசனம் பேசி விட்டு, போராட்டத்தில் ஈடுபட்ட செவிலியர்களை தாக்கி, குண்டுக்கட்டாக கைது செய்த மனிதாபி மானமற்ற தவெக அரசை, நியாயமான கோரிக்கைகளுக்காக போராடிய செவிலியர்களை நேற்று காலை முதல் காத்திருக்க வைத்து, மாலை கடந்த நேரத்தில் பேச்சுவார்த்தை என்று ஏமாற்றி அழைத்துச் சென்று, மண்டபத்தில் அடைத்து வைத்த சதிகார தவெக அரசை, இனி எப்படி நம்புவது?

"சொல்வது ஒன்று, செய்வது ஒன்று" என பொய்களில் புரளும் தவெக அரசு, தற்போது செவிலியர்களிடம் நவம்பர் 3 வரை அவகாசம் கேட்டு, இந்த பிரச்சினையை கிடப்பில் போட முயல்கிறதா?

எம்எல்ஏக்களுக்கு கார் கொடுப்பதி லும், புதிய தலைமைச் செயலகம் கட்டுவதிலும் அதிவேகமாக செயல்படும் முதல்வர் விஜய், அரசுப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்வதில் மட்டும் ஏன் "Dead Slow" ஆக இருக்கிறார்?' எனத் தெரிவித்துள்ளார்.

# போலி வீடியோ உருவாக்கிய நதீம் அஹமது கைது!

**புதுடெல்லி, அக்.07:** டில்லி போலீசாருக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் நோக்கத்துடன், பெண் செய்தியாளருக்கு போலீஸ் அதிகாரி ஒருவர் பாலியல் துன்புறுத்தல் அளித்ததாக போலி வீடியோ தயாரித்து பரப்பிய நதீம் அஹமது கைது செய்யப்பட்டார். இந்த சதியின் பின்னணியில் இருக்கும் நபர்கள் பற்றி போலீசார் விசாரிக்கின்றனர்.

டில்லி ஜந்தர் மந்தரில், கரப்பான் கட்சியினர் போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்தில் பத்திரிகையாளர்கள் என்ற போர்வையில் போலியான நபர்கள் பலர் மைக்குடன் சென்று போலீசாரிடம் ஆவேசமாக பேசி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டபோதும் ஒத்துழைப்பு தராமல் முரண்டுபிடித்தனர். இந்த பணியின்போது, பெண் பத்திரிகையாளர் ஒருவரை உதவி கமிஷனர் விவேக் பகத் என்பவர் பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக கரப்பான் கட்சியினர் குற்றம் சாட்டினர். சமூக ஊடகத்தில் வீடியோ வெளியிட்டு, 'போலீஸ் அதிகாரி துன்புறுத்தியது உண்மை' என்று சாதித்தனர்.

இந்த வீடியோவை முன் வைத்து காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகளும் போலீசாரை விமர்சித்தனர். அதையே காரணமாக கூறி, பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் அமித்ஷாவையும் கடுமையாக விமர்சித்தனர்.

வீடியோ குறித்து டில்லி சைபர் பிரிவு போலீசார் ஆய்வு செய்ததில் உண்மை அம்பலமானது. போலீஸ் மீது அவதூறு பரப்ப வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி இந்த வீடியோ போலியாக உருவாக்கப்பட்டது தெரிந்தது. விசாரணையை துரிதப்படுத்தியதில் வீடியோவை உருவாக்கி பரப்பிய நதீம் அஹமதுவை கைது செய்தனர்.

# தலைமை தேர்தல் ஆணையர் பதவி விலக வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் பேரணி






**புதுடெல்லி, அக்.07:** தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் தேர்தல் ஆணையத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர். தேர்தல் ஆணைய அலுவலகத்துக்குள் நுழைய முயன்ற அவர்களை போலீஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் அங்கு பரபரப்பான சூழல் நிலவுகிறது.

வாக்காளர் பட்டியலை புதுப்பிக்கும் நோக்கில் தேர்தல் ஆணையம் மேற்கொண்ட சிறப்பு தீவிர திருத்தத்தின் மூலம் 13 கோடி வாக்காளர் களின் பெயர்களை தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கி விட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

மேலும், புதிய வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான படிவம் 6-ல் முறைகேடான முறையில் மாற்றம் செய்யப்பட்டதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன. இந்த குற்றச் சாட்டுக்களை தேர்தல் ஆணையம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

மேலும், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், மற்ற இரண்டு தேர்தல் ஆணையர்களின் கருத்துகளை ஏற்காமல் செயல்பட்டதாக செய்தி வெளியாகியது. இதையும் தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது.

இந்நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி வலக வலி யுறுத்தி காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் டெல்லியில் இன்று பேரணியில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து தேர்தல் ஆணைய அலுவலகத்தை நோக்கி புறப்பட்ட இந்த பேரணி புறப்பட்டது. இதில், காங்கிரஸ் தலைவரும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், காங்கிரஸ் எம்பி பி

இந்த பேரணியில், பிஜு ஜனதா தளம் கட்சியின் எம்பிக்களும் கலந்து கொண்டனர். இண்டியா கூட்டணியில் இடம்பெறாத இக்கட்சி, இன்று நடைபெற்ற பேரணியில் பங்கேற்றது. நவீன் பட்நாயக்கின் அறிவுறுத்த லின்படி பேரணியில் பங்கேற்ற தாக அக்கட்சியின் நாடாளு மன்றக் குழு தலைவர் மனஸ் மங்கராஜ் தெரிவித்தார்.

இந்த பேரணியை முன்னிட்டு, தேர்தல் ஆணைய அலுவலகப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. போலீஸார் பெருமளவில் குவிக்கப்பட்டதோடு, ஏராள மான தடுப்புகளும் ஏற்படுத்தப் பட்டிருந்தன. தேர்தல் ஆணைய அலுவலக வளாகத்துக்குள் நுழைய முயன்றவர்கள்த டுக்கப்பட்டனர்.

ராகுல் காந்தி, அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோரும் தடுக்கப்பட்டனர். இதை யடுத்து அவர்கள், தடுப்புகள் மீது ஏறி உள்ளே நுழைய முயன்றனர். இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து பேரணியில் ஈடு பட்ட எம்பிக்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். ரியங்கா காந்தி உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட எம்பிக்கள் கலந்து கொண்டனர்.

சிகரத்தின்
தினத்தென்றல்

# முதுகில் குத்தும் தவெக அரசின் துரோகத்திற்கு செவிலியர்கள்தான் தற்போதைய இரையா?

## திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்



**சென்னை, அக்.07:** கண்துடைப்புக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, முதுகில் குத்தும் த.வெ.க. அரசின் துரோகத்திற்குச் செவிலியர்கள்தான் தற்போதைய இரையா?

பணி நிரந்தரம், பணிப் பாதுகாப்பு, சம வேலைக்குச் சம ஊதியம் உள்ளிட்ட தங்களது வாழ்வாதார உரிமைகளுக்காக அறவழியில் போராடிய செவிலியர்களைக் காவல்துறையைக் கொண்டு கைது செய்த த.வெ.க. அரசின் அராஜக நடவடிக்கைக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போராடும் செவிலியர்களுடன் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்திட மனம் வராத துரோக த.வெ.க. அரசுக்கு, ஈவு இரக்கமின்றி அவர்களைக் கைது செய்ய மட்டும் எப்படி மனம் வந்ததோ?

போராடிய செவிலியர்களின் பிரதிநிதிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி கைது செய்ததாக அவர்களது சட்ட ஆலோசகரே குற்றம்சாட்டியிருக்கிறார். தொடர்ந்து, போராட்டக் களத்திலிருந்த செவிலியர்களும் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சியாக இருக்கும் போது போராட்டக் களத்திற்குச் சென்று ஆதரவு; தேர்தல் வந்த போது பணி நிரந்தரம் செய்வோம் என்று வாக்குறுதி; ஆட்சிக்கு வந்ததும் அதே கோரிக்கையை முன்வைத்தால் காவல்துறை நடவடிக்கை!

முரண்பாட்டு மூட்டையாக விளங்கும் முதலமைச்சர் விஜயும், அவரது நிர்வாகத் திறனற்ற துக்ளக் நடவடிக்கைகளுக்கு முட்டுக் கொடுக்கும் அதிமேதாவி அமைச்சர்களும் இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்?

போராட்டக் களத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையிலும், செல்போன் டார்ச் வெளிச்சத்தில் தங்களது போராட்டத்தைத் தொடர்ந்த செவிலியர்களை இரவோடு இரவாக வலுக்கட்டாயமாகக் கைது செய்ததுதான் த.வெ.க. கூறும் 'மாற்றமா'? இதுதான் அவர்கள் போற்றும் ஜனநாயகமா?

போராடிய செவிலியர்களை நோக்கி பெண் காவல் அதிகாரி ஒருவரே விரலை உயர்த்தி "வேண்டாம் உங்க உயிர் முக்கியம்" என மிரட்டியதுதான் ஜனநாயக வில்லனின் குரலா என்பதைக் காவல்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் விளக்குவாரா? அல்லது, செவிலியர்களை மிரட்டி குண்டுகட்டாகக் கைது செய்த பெண் காவலர்களின் செயலை "சிங்கப் பெண் *in action*" என *Reels* செய்து தனது *virtual abuser*-கள் மூலம் *trend* செய்து விளம்பரம் தேடுவாரா?

**கனிமொழி எம்.பி. கண்டனம்**

" பணி நிரந்தரம், சம ஊதியம், ஊக்கத்தொகை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் போராடி வரும் செவிலியர்களை ஒடுக்க முற்படுகிறது தவெக அரசு.

தற்காலிகப் பணியில் உள்ள செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் எனத் தேர்தல் வாக்குறுதியில் ரீல் விட்டுவிட்டு, இப்போது அதே செவிலியர்களை ஏமாற்றியிருக்கிறது இந்த ரீல் அரசு. செவிலியர்களின் கோரிக்கைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் எனவும் கனிமொழி வலியுறுத்தி உள்ளார்.

## எரிபொருள் விலை எதிரொலி!.. விமான கட்டணம் உயர்வு!

**சென்னை, அக்.07:** விமான எரிபொருள் விலை லிட்டருக்கு ரூ.16 உயர்ந்துள்ள நிலையில் உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக இண்டிகோ நிறுவனம் அறிவித்திருக்கிறது.

500 கி.மீ வரை 375ம், 501 முதல் 1000 கி.மீ வரை ரூ.600-ம், 1001 முதல் 1500 கி.மீ வரை ரூ.1150-ம், 2000 கி.மீ மற்றும் அதற்கு மேல் ரூ.1300-ம், சார்க் நாடுகளுக்கு ரூ.3 ஆயிரமும், தெற்காசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ரூ.5500-ம், ஐரோப்பிய நாடுகளுக்கு ரூ.10 ஆயிரமும்உயர்த்தப்பட்டிருப்பதாக அந்நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

# மைசூரு தசரா விழாவுக்கு தமிழக முதல்வர் விஜய்க்கு அழைப்பு



**பெங்களூரு, அக்.07:** உலகப் புகழ்ப்பெற்ற மைசூரு தசரா விழா வரும் 11-ம் தேதி தொடங்கி 21ம் தேதிவரை 10 நாட்கள் நடைபெறுகிறது. கர்நாடக அரசின் சார்பில் பிரம்மாண்டமாக கொண்டாடப்படும் இவ்விழாவில், வெளி மாநிலங்களை சேர்ந்தவர்களும், வெளிநாடுகளை சேர்ந்தவர்களும் லட்சக்கணக்கில் பங்கேற்க உள்ளனர்.

இந்நிலையில் கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் நேற்று மைசூருவில் அமைச்சர்கள், அரசு அதிகாரிகள், மாவட்ட எம்பி, எம்எல்ஏக்கள் உள்ளிட்டோருடன் ஆலோசனை நடத்தினார். அப்போது 10 நாட்களும் நடத்த வேண்டிய பல்வேறு கலை நிகழ்வுகள் குறித்தும், சிறப்பு விருந்தினர்களை அழைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

டி.கே.சிவகுமார் முதல்வரான பின்னர் நடைபெறும் முதல் தசரா விழா என்பதால் இதனை வெகு சிறப்பாக கொண்டாட வேண்டும் என முடிவெடுக்கப்பட்டதாக தெரிகிறது.

இந்நிலையில் கர்நாடக அரசின் சார்பில் விமான கண்காட்சியை தொடங்கி வைக்குமாறு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல தசராவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்குமாறு தமிழக முதல்வர் விஜய்க்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் விரைவில் தமிழக முதல்வர் விஜய்க்கு தொலைபேசி வாயிலாக அழைப்பு விடுப்பார் என மைசூரு மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## பைக் ரேஸ், சாகசம்:

# 2,000 பைக்குகள் பறிமுதல்



**சென்னை, அக்.07:** சென்னையின் முக்கிய சாலைகளில் இரவு நேரங்களில் பைக்ரேஸ் மற்றும் ஆபத்தான சாகசங்களில் ஈடுபடும் இளைஞர்களால் பொது மக்கள் அச்சமடைந்து வருகின்றனர். அண்ணாசாலை, கிழக்கு கடற்கரைச் சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலை, மெரினா காமராஜர் சாலை உள்பட பல முக்கிய சாலைகளில் இரவு நேரங்களில் இளைஞர்கள் சிலர் அதிவேகமாக பைக்குகளை ஓட்டிச் சென்று ரேசில் ஈடுபடுகின்றனர்.

மேலும், ஆபத்தை உணராமல் வீலிங் உள்ளிட்ட பல்வேறு சாகசங்களிலும் ஈடுபடுகின்றனர். இதனால் சாலையில் செல்லும் மற்ற வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்தில் உறைந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பைக் ரேசில் ஈடுபடுபவர்கள் மட்டுமின்றி, சாலைவிதிகளை முறையாகக் கடைபிடித்து செல்லும் பொதுமக்களும் இது போன்ற சாகசங்களால் விபத்தில் உயிரிழந்த சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இந் நிலையில், நேற்று முன்தினம் 4-ம் தேதி அதிகாலை நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் அருகே 15 முதல் 20 இளைஞர்கள் இருசக்கர வாகனங்களில் திரண்டு, பொதுமக்களின் உயிருக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பைக் சாகசத்தில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வேகமாக பரவின. இந்த வீடியோ காட்சிகளின் அடிப்படையில் போக்குவரத்து போலீஸார் விசாரணை நடத்தி, 16 இளைஞர்கள் மற்றும் மாணவர்களைக் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து சாகசத்துக்குப் பயன் படுத்தப்பட்ட 11 பைக்குகள் பறிமுதல் செய்யப்பட்டன.

பைக் ரேஸ் மற்றும் சாகசத்தில் ஈடுபடும் இளைஞர்கள், போலீஸாரிடம் சிக்காமல் இருக்க வாகனங்களில் பதிவு எண் பலகை இல்லாமல் செல்வதையும் வழக்கமாகக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து பைக் ரேஸ் மற்றும் சாகசங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், சென்னை காவல் ஆணையர் அமல்ராஜ் உத்தரவின்பேரில், போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் சாமுண்டீஸ்வரி தலைமையில் போக்குவரத்து போலீஸார் கடந்த 3 நாட்களாக தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

இந்த சோதனையில் பைக் ரேஸ், சாகசம் மற்றும் பதிவு எண் பலகை இல்லாமல் இயக்கப்பட்ட 2 ஆயிரம் பைக்குகள் பறிமுதல் செய்யப்பட்டன.

மக்களை அச்சுறுத்தும் வகையிலும், பொதுச் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தும் வகையிலும் வீலிங், பைக் ரேஸ் மற்றும் பிற போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் சாமுண்டீஸ்வரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## பெண் பத்திரிகையாளர்களின் பாலியல் புகாரில் சிக்கிய

# டெல்லி ஏசிபிக்கு பதவி உயர்வு



**புது டெல்லி, அக்.07:** பெண் பத்திரிகையாளர்களை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய புகாரில் சிக்கிய டெல்லி காவல் உதவி ஆணையருக்கு (ஏசிபி) பதவிஉயர்வுவழங்கப்பட்டுள்ளது.

டெல்லியின் ஜந்தர் மந்தரில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக அக்டோபர் 3 முதல் போராட்டம் நடைபெற்று வருகிறது. இதன் செய்தியை சேகரிக்கச் சென்ற 3 பெண் பத்திரிகையாளர்கள் மீது பாலியல் துன்புறுத்தல் ஏற்பட்டதாகப் புகார் எழுந்தது.

இதில் குறிப்பாக டெல்லியின் காவல்துறை ஏசிபி விவேக் பகத், மீது புகார் எழுந்தது. இவர் மீது புகார் அளித்த பெண் பத்திரிகையாளர்கள் வழக்கில் குற்றப்பிரிவு விசாரணையும் தொடங்கி உள்ளது.

இந்நிலையில், ஏசிபி விவேக் பகத்திற்கு டெல்லி அரசால் பதவிஉயர்வுவழங்கப்பட்டுள்ளது. பகத்துடன் சேர்த்து 12 'தேர்வு நிலை' அதிகாரிகளுக்கு துணை காவல் ஆணையர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை டெல்லி துணைநிலை ஆளுநர் அக்டோபர் 5, 2026 அன்று பிறப்பித்தார். அனைவரும் புதிய பதவியை உடனடியாக ஏற்கும்படியும் அவர் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளார். தற்போது புதுடெல்லி கன்னாட் பிளேஸ் உட்கோட்டத்தின் ஏசிபியாகப் பகத் பணியாற்றி வருகிறார். கடந்த, 2024 முதல் ஏசிபி பகத் அப்பதவியில் உள்ளார்.

பெண் பத்திரிகையாளர்கள் அளித்த புகாரில், 'போராட்டத்தின்போது அகில இந்திய மாணவர்கள் சங்கத்தின் ஒரு செயல்பாட்டாளர் தடுத்து நிறுத்தப்படுவதைப் படம் பிடித்துக் கொண்டிருந்தேன். அப்போது, பகத் தன்னைத் தவறான முறையில் தொட்டுத் தள்ளினார். எனது பின்னாலிருந்து என்னைத் தொட்டபின் நான் அலறியதால் அவர் அங்கிருந்து ஓடிவிட்டார்.' எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, வேறு இரண்டு பெண் பத்திரிகையாளர்களும் இதே போன்ற புகார்களை முன்வந்துள்ளனர். இப்புகார்களை நியாயமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக டெல்லி காவல்துறை தெரிவித்தது.

பெண் பத்திரிகையாளர்கள் புகார் விசாரணையில் புகார்தாரர்கள் மற்றும் தொடர்புடைய மற்றவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இதுவரை எந்த முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்படவில்லை.

இந்த விவகாரத்தில், 'லலிதா குமாரி vs உத்தரப் பிரதேச அரசு' (2013) என்ற வழக்கில் உச்ச நீதிமன்ற அரசியலமைப்பு அமர்வு வழங்கிய தீர்ப்பு முக்கியமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. அந்தத் தீர்ப்பின்படி, "ஒரு தகவல் குற்றம் வெளிப்படுத்தும்போது, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 154-ன் கீழ் எப்.ஐ.ஆர் பதிவு செய்வது கட்டாயமாகும்.

இதில் எப்.ஐ.ஆர் பதிவு செய்ய மறுப்பதற்கோ அல்லது தாமதப்படுத்துவதற்கோ காவல்துறைக்கு எவ்வித அதிகாரமும் இல்லை" எனக் கூறப்பட்டது.

இதன்படி, ஏசிபி பகத் மீது உடனடியாக எப்ஐஆர் பதிவு செய்ய வேண்டும் என பத்திரிகையாளர் அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சிஜேபி தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# செவிலியர்களின் கோரிக்கைகளைப் பேச்சுவார்த்தை மூலம் நிறைவேற்றிட அரசு முன்வர வேண்டும் - டிடிவி தினகரன்



**சென்னை, அக்.07:** பணி பாதுகாப்பு, பணி நிரந்தரம், சம வேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த செவிலியர்கள் காவல்துறையினரால் வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தங்களது உரிமைகளுக்காக நியாயமான முறையில் போராடி வரும் செவிலியர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய தவெக அரசு, காவல்துறையை அடக்குமுறை கருவியாகப் பயன்படுத்தி, போராட்டம் நடைபெற்ற பகுதியில் மின்சாரத்தை துண்டித்து, பந்தல்களை அகற்றி, போராட்டத்தில் ஈடுபட்ட செவிலியர்களை இழுத்துச் சென்று காயம் ஏற்படும் அளவுக்கு நடந்து கொண்டிருப்பது கடும் கண்டனத்துக்குரியதாகும்.

முறையான முன் அனுமதியுடன் அமைதியான முறையில் போராடி வந்த செவிலியர்களின் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தை என்ற பெயரில் அழைத்து, கைது செய்து ஒரு மண்டபத்தில் அடைத்து வைத்திருப்பது செவிலியர்களுக்கு அரசு இழைத்துள்ள மிகப்பெரிய துரோகமாகும்.

தேர்தலுக்கு முன்பு போராட்டக் களங்களுக்கு நேரில் சென்று ஆதரவு தெரிவித்ததுடன், தங்களது தேர்தல் அறிக்கையிலும் செவிலியர்களைப் பணி நிரந்தரம் செய்வதாக வாக்குறுதி அளித்தவர்கள், தற்போது ஆட்சிக்கு வந்த பிறகு அதே கோரிக்கையை வலியுறுத்திப் போராடும் செவிலியர்களை காவல்துறையைப் பயன்படுத்தி ஒடுக்கி, அவர்களின் போராட்டத்தை நசுக்க முயல்வது கண்டனத்துக்குரியது.

முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் கதாநாயகன் சினிமாவில் மட்டுமே இருக்கிறார், நிஜத்தில் வில்லன் என்ற நிலைப்பாட்டை அறிவிக்க முயல்கிறாரா? என்ற கேள்வியை எழுப்புகிறது.

எனவே, கொரோனா பெருந்தொற்று போன்ற மிகப்பெரிய பேரிடர் காலங்களிலும் தங்களது உயிரைப் பொருட்படுத்தாமல் முன்களத்தில் நின்று பொது மக்களின் உயிரைக் காப்பாற்றிய செவிலியர்களின் நியாயமான கோரிக்கைகளை பேச்சுவார்த்தை மூலம் நிறைவேற்ற தவெக அரசு முன்வர வேண்டும்.

# சூனியக்காரி' என கிண்டல் செய்யப்பட்ட பெண் ராஜஸ்தான் மாநில அரசு தேர்வில் வெற்றி பெற்று சாதனை!



**ஜெய்ப்பூர், அக்.07:** : ராஜஸ்தானில் கணவர், மகள் உயிரிழந்த நிலையில், சூனியக்காரி என கிண்டல் செய்யப்பட்ட பெண் ஒருவர் அம்மாநில நிர்வாக பணித் தேர்வில் (ஆர்ஏஎஸ்) வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், அஜ்மீரைச் சேர்ந்த ரோகினி குர்ஜர் 2006-ம் ஆண்டு பிஏ பட்டம் பெற்று தனது கிராமமான குக்ராவில் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற பெருமையை பெற்றார்.

பின்னர், அவர், 2011-ல் திருமணம் செய்து கொண்டு, 2013-ல் தாயானார். 2021-ல் அவரது கணவர் உயிரிழந்தார். இது ரோகினிக்கு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியது.

ரோகினிக்கு 2 பெண் குழந்தைகள் பிறந்ததால், மாமியார் வீட்டில் அவரை கேலி செய்ததுடன், அவருக்கு போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

அத்துடன், கிராமத்தில் சிலர் கணவரின் மரணத்துக்கு ரோகினிதான் காரணம் என்று குற்றம் சாட்டி, அவரை 'சூனியக்காரி' என்று அழைத்தனர். எனினும், ரோகினியின் சகோதரர் நரேந்திர குர்ஜரும், கணவரின் பாட்டி புஷ்பா தேவியும் அவருக்கு உறுதுணையாக இருந்தனர். ரோகினி மீண்டும் படிப்பைத் தொடங்க வேண்டும் என்று பாட்டி புஷ்பா தேவி தொடர்ந்து ஊக்கப்படுத்தினார்.

இதையடுத்து, 2021-ம் ஆண்டு ரோகினி போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகத் தொடங்கினார். ரோகினி ராஜஸ்தான் நிர்வாகப் பணித்தேர்வில் (ஆர் ஏஎஸ்) தனது முதல் முயற்சியில் முதல் நிலைத் தேர்வில் வெற்றி பெற்றார். ஆனால், முதன்மைத் தேர்வில் மதிப்பெண் குறைந்ததால் வெற்றி பெறவில்லை. மீண்டும் முயற்சி செய்த அவர், 2023-ம் ஆண்டு தேர்வுக்குத் தயாராக ஜெய்ப்பூருக்குச் சென்றார்.

அப்போது அவரது பாட்டி புஷ்பா தேவியும் உயிரிழந்தார். ஒரு வழியாக அந்த துயரத்திலிருந்து மீண்டு, ரோகினி தனது படிப்பைத் தொடர்ந்தார். ஆனால், 2024-ம் ஆண்டு அவரது 10 வயது மூத்த மகள் திடீரென உடல்நலக் குறைவால் உயிரிழந்தார். இதனால், நிலைகுலைந்து போன ரோகினி ஆர்ஏஎஸ் முதன்மைத் தேர்வை மீண்டும் எழுத வேண்டாம் என்று முடிவு செய்தார். ஆனால், அவரது குடும்பத்தினர், குறிப்பாக, அவரது இளைய மகள் பூமிக்காகவாவது தேர்வை எழுத வேண்டும் என்று அவரை சமாதானப்படுத்தினர்.

இதற்கிடையே, ஆர்ஏஎஸ் முதன்மைத் தேர்வுக்கு 2 நாட்களுக்கு முன்பு ரோகினி விபத்தில் சிக்கினார். இதில் அவரது கண் கடுமையாக காயமடைந்தது. ஒரு கண்ணில் கட்டுப் போடப்பட்டிருந்த நிலையில், மற்றொரு கண்ணின் உதவியுடன் தேர்வு எழுதினார்.

2024-ம் ஆண்டு ஆர்ஏஎஸ் தேர்வில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விதவைப் பிரிவில் 2-ம் இடம் பிடித்தார். அவருக்கு ராஜஸ்தான் கணக்கு பணித்துறை ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த விடாமுயற்சி இறுதியில் அவரை ஆர்ஏஎஸ் தேர்வின் வெற்றிக் கோட்டை கடக்கச் செய்தது.

# செவிலியர்கள் மீதான காவல்துறை அராஜகம் கொடூரத்தின் உச்சம் : இபிஎஸ் கடும் தாக்கு

**சென்னை, அக்.07:** தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அறவழியில் போராட்டம் நடத்திய செவிலியர்கள் மீது இன்றைய தவெக அரசின் காவல்துறை அரங்கேற்றியுள்ள அராஜகம் என்பது கொடூரத்தின் உச்சம் என எடப்பாடி பழனி சாமி கண்டனம் தெரிவித் துள்ளார்.



"பாசிசம், பாயாசம்" என்று *Rhyming* வசனங்கள் பேசிய முதல்வரின் கையில் இருக்கும் காவல்துறை, உயிர் காக்கும் பணி யில் ஈடுபட்டுள்ள செவிலியர்கள் மீது நடத்தியுள்ள பாசிச அக்கிரமத்தை எப்படி இந்த *Reels* முதல்வர் *Justify* செய்வார்?

ஆட்சிக்கு வருவது முன், இதே செவிலியர்கள் முன் நின்று உங்கள் கட்சி நிர்வாகிகள், இன்றைக்கு அமைச்சராக இருப்பவர்கள் பேசியது எல்லாம் நினைவில் இருக்கிறதா? ஆட்சிக்கு முன் ஒரு பேச்சு, ஆட்சிக்கு பின் அதற்கு மாறான செயல் என்பது தான் மாற்றமா?

தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் பரவுவது குறித்து மக்கள் பிரச்சனையை சுட்டிக் காட்டினால் கூட ஏற்றுக்கொள்ள மனமின்றி அவதூறுகளை அள்ளி வீசும் நபராக இருக்கிறார் இன்றைய சுகாதாரத் துறை அமைச்சர்.

தனது துறையைச் சார்ந்த செவிலியர்கள் போராடுவது குறித்து ஒரு வார்த்தை பேசி னாரா? செவிலியர்களிடம் வந்து பேச்சுவார்த்தை நடத்துவதை விட அப்படி என்ன பெரிய வேலை இருக்கிறது இந்த அமைச்சருக்கு?

போராடும் இடத்தில் மின் சாரத்தை துண்டிப்பது, பேச்சு வார்த்தை எனக் கூறி அழைத்து சென்று கைது செய்வது என மிகவும் கீழ்த்தரமாக ஒரு போராட்டத்தை அணுகியுள்ள இன்றைய ஆச்சரியக்குறி அரசுக்கு எனது கடும் கண்டனம்.

கைது செய்யப்பட்டுள்ள செவிலியர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட்டு, அவர்கள் மீது எந்த வழக்கும் பதியாமல் இருப்பதை உறுதி செய்து, ஜனநாயக ரீதியாக அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என இந்த அரசை வலி யுறுத்துகிறேன்.

# இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் கேப்டன் பொறுப்பில் இருந்து ஹர்மன்பிரீத் விலகல்

**மும்பை, அக்.07:** : இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் கேப்டன் பொறுப்பில் இருந்து ஹர்மன் பிரீத் கவுர் விலகி உள்ளார். சுமார் 10 ஆண்டுகள் இந்திய மகளிர் அணியின் கேப்டனாக அவர் செயல்பட்டுள்ளார்.



இந்திய மகளிர் அணிக்காக சர்வதேச கிரிக்கெட்டில் கடந்த 2009-ல் அவர் அறிமுகமானார். 2016 முதல் டி20 கிரிக்கெட்டில் இந்திய அணியை வழிநடத்தி வந்தார். மித்தாலி ராஜ் ஓய்வுக்கு பிறகு, ஒருநாள், டி20 மற்றும் டெஸ்ட் மூன்று மூன்று விதமான கிரிக்கெட்டிலும் இந்திய மகளிர் அணியின் கேப்டனாக ஹர்மன்பிரீத் செயல்பட்டார்.

கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற மகளிர் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் அவரது தலைமையி லான அணி சாம்பியன் பட்டம் வென்றது. சுமார் 211 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணியை வழிநடத்தி உள்ளார். அண்மையில் முடிந்த ஆசிய விளையாட்டு போட்டி மற்றும் ஆசிய போட்டியில் பட்டம் வென்ற இந்திய அணி அவரது தலைமையில் செயல்பட்டது.

37 வயதான அவர், இந்திய அணிக்காக 8 டெஸ்ட், 164 ஒரு நாள் மற்றும் 205 டி20 போட்டி களில் விளையாடி உள்ளார். மொத்தம் 9,191 ரன்கள் எடுத்துள்ளார். கடந்த சில மாதங்களாக அணியில் கேப்டன் மாற்றம் குறித்த பேச்சு எழுந்த நிலையில், பிசிசிஐ ஆய்வு கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்நிலையில், கேப்டன் பொறுப்பில் இருந்து விலகுவதாக தற்போது அவர் அறிவித்துள்ளார்.

"இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் அனைத்து பார்மெட் கேப்டன் பொறுப்பில் இருந்தும் நான் விலகுகிறேன். இது அவ்வளவு எளிதாக எடுக்கப் பட்ட முடிவு அல்ல. ஏனெனில், இந்தப் பயணத்தின் நினைவுகள், உணர்வுகள், தியாகங்கள் மற்றும் தருணங்கள் என அனைத்தும் என் வாழ்நாள் முழுவதும் என்னோடு இருக்கும்.

இதயம் முழுவதும் எண்ணற்ற உணர்ச்சியுடன் அமைதியோடு கேப்டன் பொறுப்பில் இருந்து விலகுகிறேன். நமது அணி சிறந்த இடத்தில் உள்ளது என்று நம்பு கிறேன். எனது கேப்டன் பொறுப்பு தான் இதன் மூலம் முடிவுக்கு வருகிறது. கிரிக்கெட் மீது நான் கொண்டுள்ள பிரியத்தின் பயணம் தொடரும்" என்று சமூக வலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் அடுத்த கேப்டனாக ஸ்மிருதி மந்தனா அறிவிக்கப்பட வாய்ப்புள்ளது. மகளிர் பிரிமீயர் லீக் தொடரில் அவரது தலைமை யிலான அணி சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தி உள்ளது.

சர்வதேச கிரிக்கெட்டில் சிறந்த ஆட்டத்தை அவர் வெளிப்படுத்தி வருகிறார். அத னால் அடுத்த கேப்டன் வாய்ப்பை பிசிசிஐ அவருக்கு வழங்கலாம் என எதிர் பார்க்கப் படுகிறது.

# விவசாயிகளை வஞ்சிக்கும் தவெக ஆட்சியில், வேளாண்மைத் துறைச் செயலாளர் நியமனம் எப்போது?

## தவெக அரசுக்கு உதயநிதி சரமாரி கேள்வி

**சென்னை, அக்.07:** முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசு அமைந்த பிறகு வேளாண்துறை செயலாளராக நியமிக்கப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரியான, விவசாய கடன் தள்ளுபடி மற்றும் வேளாண் பட்ஜெட் தயாரிப்பு ஆகியவற்றில் முக்கிய பங்கு வகித்தார்.



ஆனால், யாரும் எதிர்பாராத விதமாக கடந்த செப்டம்பர் 11ம் தேதி பணியிடமாற்றம் செய்யப்பட்டார். மேலும் சமூக நீதித்துறை செயலாளராக இருந்த என். சுப்பையன் ஐஏஎஸ், கூடுதல் பொறுப்பாக வேளாண்துறையை கவனித்து வருகிறார்.

இந்நிலையில், அந்த பதவிக்கான முழு நேர செயலாளரை நியமிக்காதது ஏன்? என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறைச் செயலாளராக இருந்த சங்கர் ஐ.ஏ.எஸ்., தொல்லியல் ஆணையராகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டு ஒரு மாதம் ஆகப் போகிறது.

ஆனால், இப்போது வரை வேளாண் துறைக்கு முழுநேரப் பொறுப்பில் புதிய செயலாளர் நியமிக்கப்படாமல் காலம் தாழ்த்தப்படுவது. உழவர் பெருமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. தனி நிதிநிலை அறிக்கையைக் கொண்ட வேளாண் துறை போன்ற ஒரு முக்கியத் துறைக்கு முழுநேரப் பொறுப்பில் செயலாளர்கூட இல்லாமல் இருப்பதை என்ன காரணம் சொல்லி இவர்களால் நியாயப்படுத்த முடியும்?

பருவமழை தொடங்கவுள்ள நேரத்தில், வேளாண்மைத் துறைக்கு நிலையான நிர்வாகத் தலைமையும், துரிதமான ஒருங்கிணைப்பும் தேவை என்பதை எவரும் மறுக்க முடியாது.

குறிப்பாக, விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்புடைய முடிவுகள் தாமதமின்றி எடுக்கப்படுவதற்கும், மாவட்ட அளவிலான பணிகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் இது அவசியமானது. இதனைக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டிய, துறை அமைச்சரும் முதலமைச்சரும் வேறு வேலைகளில் தான் மும்முரம் காட்டுகின்றனர்.

த.வெ.க. ஆட்சிக்கு வந்ததுமே, பயிர்க்கடன் தள்ளுபடியில் மோசடி செய்தார்கள். இயற்கையால் குறுவை பொய்த்து, த.வெ.க. அரசின் சிந்தனையற்ற செயல்பாட்டால் சம்பா சாகுபடியும் பாதிப்பைச் சந்தித்திருக்கிறது. இப்படித் தொடர் ஏமாற்றங்களால் விரக்தியில் உள்ள விவசாயப் பெருமக்கள், தமிழ்நாடெங்கும் போராடி வருகின்றனர்.

கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் வராததால், முத்துப் பேட்டையில் விவசாயி கள் சாலை மறியல் செய்துள்ளனர். தண்ணீர் திறந்துவிடக் கோரி, விவசாயிகள் வீராணம் ஏரியில் இறங்கிப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடிசெய்ய வலியுறுத்தி, சென்னையில் வருகிற 14ஆம் தேதி, தலைமைச் செயலகத்தை முற்றுகையிடப் போவதாகத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கூறியுள்ளனர்.

இத்தகைய சூழலில், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறைக்கு அனுபவம் வாய்ந்த மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டு, உழவர்களின் துயர் துடைப்பதற்கான பணிகள் நடைபெற்றிருக்க வேண்டும்.

ஆனால், அந்தத் துறையைப் பொறுப்பு ஏற்பாட்டில் விட்டிருப்பது, வேளாண்குடிப் பெருமக்களின் நலனில் இந்த அரசுக்குத் துளியும் அக்கறை இல்லை என்பதையே காட்டு கிறது. 'செயல்படாத அமைச்சர், இல்லாத செயலாளர்' எனத் த.வெ.க. ஆட்சியைப் போலவே வேளாண் துறையும் திண்டாடுகிறது. உலகுக்கே உணவளிக்கும் உழவைக் காப்பாற்றுவதில் இனியும் காலதாமதம் செய்யாமல், புதிய முழுநேர வேளாண்மைத் துறைச் செயலாளரை உடனடியாக நியமிக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தூங்குமூஞ்சி த.வெ.க. அரசை வலியுறுத்துகிறேன்" என உதயநிதி வலியுறுத்தியுள்ளார்.

## மீண்டும் குறைந்த தங்கம் விலை:

**சென்னை, அக்.07:** சென்னையில் நேற்று காலை 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.15 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,660-க்கும், பவுன் ரூ.1,09,280-க்கு விற்பனை ஆகியது.

24 காரட் தங்கம் விலை பவுனுக்கு ரூ.128 குறைந்து, ஒரு பவுன் 1,19,216-க்கும், 18 காரட் தங்கம் விலை பவுனுக்கு ரூ.120 குறைந்து, ஒரு பவுன் 89,760-க்கும் விற்பனை ஆகிறது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில் இன்று மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.245-க்கு விற்பனை ஆகிறது. ஒரு கிலோ ரூ.2,45,000-க்கும் விற்பனை ஆகிறது

# மதுக்கடைகளை விட மலைகளை பாதுகாப்பது முக்கியம்: உயர் நீதிமன்ற மதுரை கிளை

**மதுரை, அக்.07:** 'மதுக்கடைகளை பாதுகாப்பதை விட, இயற்கை வள மான மலைகளை பாதுகாப்பது முக்கியம்' என, மதுரை மாவட்டம், பேரையூர் அருகே கல் குவாரிக்கு தடை கோரிய வழக்கில், உயர் நீதி மன்ற மதுரை கிளை கருத்து தெரிவித்தது.

நம்மாழ்வார் இயற்கை பாதுகாப்பு சங்க தலைவர் பெத்தணன் தாக்கல் செய்த பொதுநல மனுவில்,'பேரையூர் அருகே எஸ்.பாப்பிநாயக்கன்பட்டி மற்றும் பி.சங்கரலிங்காபுரத்தில் 'ஓணான் கரடு' அல்லது 'பெருமாள் மலை' என்ற பெயரில் மலைக்குன்று உள்ளது. இதில், முதுமக்கள் தாழி, வட்டெழுத்துக்கள் உள்ளிட்ட தொல்லியல் சின்னங்கள் உள்ளன.

இங்கு கல் குவாரி நடத்த அனு மதிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் சின்னங்கள், இயற்கை வளத்திற்கு பாதிப்பு ஏற்படும். குவாரிக்கு தடை விதிக்க வேண்டும்' என, கோரி இருந்தார்.

நீதிபதிகள் பி.வேல்முருகன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு விசாரித்தது. தமிழக அரசு தரப்பில், பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் கோரப் பட்டது.

நீதிபதிகள், 'மதுக்கடைகளை பாது காப்பதில் செலுத்தும் அக்கறையை, பதில் மனு தாக்கல் செய்வதில் காட்டுவதில்லை. மதுக்கடைகளை பாதுகாப்பதை விட இயற்கை வள மான மலைகளை பாதுகாப்பது முக்கியம். இயற்கை வளங்களை சுரண்டினால் திரும்ப கிடைக்குமா?' என, கேள்வி எழுப்பி, தமிழக கனிம வளத்துறை கமிஷனர், தொல்லியல் துறை இயக்குநர், கலெக்டர் நவ., 2ல் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டனர்.

# புதுச்சேரியில் நடப்பாண்டில் 637 பேருக்கு டெங்கு காய்ச்சல்:

## சுகாதாரத்துறை இயக்குநர் செவ்வேள் தகவல்

**புதுச்சேரி. அக்.06:** புதுச்சேரியில் நடப்பாண்டு இதுவரை 637 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், உயிரிழப்பு எதுவும் இல்லை என்றும் சுகாதாரத்துறை இயக்குநர் செவ்வேள் தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் ஆட்டோ மூலம் டெங்கு மற்றும் சிக்கன்குனியா விழிப்புணர்வு பிரச்சாரம் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையம், சமுதாய நலவழி மையங்கள், நகர சுகாதார மையங்கள் உள்ள கிராமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

மேலும் எப்எம் ரேடியோக்கள், திரையரங்குகள் மற்றும் கேபிள் டிவிகள் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு விளம்பரம் செய்யப்பட இருக்கிறது. இந்நிலையில் இன்று சுகாதார இயக்குநரக வளாகத்தில் நடந்த டெங்கு மற்றும் சிக்கன்குனியா விழிப்புணர்வு பிரச்சார ஆட்டோ வாகனங்களை சுகாதா ரத்துறை இயக்குநர் செவ்வேள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதற்கான ஏற்பாடுகளை துணை இயக்குநர் (செய்தி, கல்வி மற்றும் தொடர்பு பிரிவு) ரகுநாதன் செய்தார். இந்நிகழ்ச்சி யில் துணை இயக்குநர் (பொது சுகாதாரம்) உமாசங்கர், உதவி இயக்குநர் (தேசிய கொசு மற்றும் பூச்சுகளால் பரவும் நோய்த்தடுப்பு பிரிவு) முருகன் மற்றும் மலேரியா தொழில்நுட்ப பிரிவு அலு வலர்கள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து சுகாதாரத்துறை இயக்குநர் செவ்வேள் கூறும்போது, புதுச்சேரியில் மழைக்காலம் தொடங்க உள்ள நிலையில், பொதுமக்கள் தங்கள் வீடுகளிலும் சுற்றுப்புறங்களிலும் டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மழைநீரானது வீட்டை சுற்றி வீணாகக் கிடக்கும் பயன்படுத்தப்படாத டயர்கள், உடைந்த பாத்திரங்கள், பிளாஸ்டிக் கப்புகள், தேங்காய் ஓடுகள் மற்றும் சிமெண்ட் தொட்டிகள் போன்ற பொருட்களில் தேங்குவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இதுபோல் தேங்கி நிற்கும் தூய்மையான நீரில் தான் டெங்கு காய்ச்சலை பரப்பக்கூடிய ஏடிஸ் கொசுக்கள் மிக அதிவேகமாக இனப்பெருக்கம் செய்கின்றன.

புதுச்சேரி முழுவதும், இந்த ஆண்டு ஜனவரி முதல் இன்று வரை 637 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள னர். மேலும், சுகாதாரத்துறை மேற்கொண்ட தீவிர டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக, இந்த ஆண்டு புதுச்சேரி முழுவதும் டெங்கு உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை.

கொசுக்கள் உற்பத்தியாவதை தடுத்து, டெங்கு பாதிப்பு ஏற்படுவதை தடுத்து டெங்கு இல்லாத புதுச்சேரியை உருவாக்க பொதுமக்கள் அனைவரும் தங்கள் வீட்டை மட்டுமின்றி சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொண்டு, அரசு எடுக்கும் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சர்ச்சை வீடியோ விவகாரம்:

# தவெக வேட்பாளர் சத்யபாமா மீது தேர்தல் ஆணையத்தில் திமுக புகார்

**சென்னை, அக்.07:** அமைச்சர்கள் தங்குவதற்கு ரூ.14 லட்சம் செலவு செய்துள்ளதாகவும் தாராபுரம் தொகுதி தவெக வேட்பாளர் சத்யபாமா பேசிய வீடியோ மீது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க திமுக சார்பில் அக்கட்சியின் எம்எல்ஏ ஆஸ்டின் தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்துள்ளார்.



கடந்த தேர்தலில் ரூ.31 கோடி செலவழித்ததாகவும், இம்முறை அமைச்சர்கள் தங்குவதற்கு ரூ.14 லட்சம் செலவு செய்துள்ளதாக வும் தாராபுரம் தொகுதி தவெக வேட்பாளர் சத்யபாமா பேசியது போன்ற வீடியோ நேற்று முதல் சமூக வலைதளங்களில் வைர லாகி வருகிறது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் திமுக சார்பில் அக்கட்சியின் எம்எல்ஏ ஆஸ்டின் இன்று புகார் அளித்தார்.

அதனைத் தொடர்ந்து செய்தி யாளர்களிடம் பேசிய ஆஸ்டின், "சட்டப்பேரவைத் தேர்தலில் ஒரு வேட்பாளர் அதிகபட்சமாக ரூ.40 லட்சம் மட்டுமே செலவு செய்ய முடியும். தேர்தல் விதி முறைகள் மற்றும் மக்கள் பிரதி நிதித்துவ சட்டத்தின்படி ஒரு வேட்பாளர் குறிப்பிட்ட அளவை தாண்டி செலவு செய்தால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும். 3 ஆண்டு களுக்கு அவரால் தேர்தலில் போட்டியிட முடியாது. அதிக பட்சமாக 6 மாத காலம் சிறை தண்டனையும் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் விதிமுறை.

இந்த அடிப்படையில் அமைச்சர்கள் தங்குவதற்கு 14 லட்சம் ரூபாய் செலவு செய்ததாக சத்யபாமா வாக்குமூலமாக கொடுத்திருப்பதை ஆய்வு செய்து, அது வேட்பாளர் செலவில் சேர்க்கப்படாமலோ, வங்கிக் கணக்கில் பரிமாற்றம் இல்லாமலோ இருக்குமேயானால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என நாங்கள் தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்துள்ளோம்.

அந்த வீடியோ தவறாக சித்தரிக்கப்பட்டதாக சத்யபாமா கூறுகிறார். ஆனால் அந்த வீடியோ போலியானதாக தெரியவில்லை" என்றார்.




சிகரத்தின்
# தினத்தென்றல்

RNI: NO TNTAM/2013/55872 Postal R.No: TN/CC(S)DN/525/15-17

E.MAIL: dhinathendral@gmail.com Ph:044 - 79690504, 98400 83174




# அடுத்தடுத்து அம்பலமாகிறது 'தூய சக்தி' தவெகவின் ஊழல்கள்

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் விமர்சனம்

**மதுரை, அக்.07:** "தேர்தலுக்கு முன்பு வரையிலும் தூய சக்தி என, பரப்புரை செய்த தவெக ஆட்சியில், டாஸ்மாக் உள்ளிட்ட ஒவ்வொரு துறையிலும் ஊழல் குறித்த தகவலும் தற்போது வெளி வருகிறது என முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் விமர்சித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தமிழக அரசியல் வரலாற்றிலே ஆட்சிக்கு வந்த 4 மாதத்தில் இடைத்தேர்தல் வந்துள்ளது. தமிழக மக்களை தவறாக மதிப்பீடு செய்த தவெகவினர், முதல்வர் விஜய் முகத்தை ஒருமுறை காண்பித்தால் போதும், வெற்றி என நினைத்த அந்தக் கட்சிக்கு இடைத்தேர்தல் சவாலாக இருக்கிறது.

தேர்தல் களத்தில் சந்தித்த எதிர்ப்பின் மூலம் செல்லும் இடங்களில் எல்லாம் மக்களின் கடும் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டி இருந்ததால் தவெகவினர் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி வேட்பாளரும், அமைச்சர்களும் பிரச்சாரத்திற்கு செல்லலாம் என்ற எடுத்த முயற்சி கடைசியில் தோல்வியில் முடிவடைந்தது.



துரோகம் செய்தவர்களை வேட்பாளர் தேர்வில் முன்னுரிமை கொடுத்து தேர்வு செய்தது தவறு என தவெகவினரே பேசிக் கொண்டதை நாம் களத்திலே பார்க்க முடிந்தது. மொத்தத்தில் ரியாலிட்டியை மறந்துவிட்டு ரீல்ஸ் மூலம் ஆட்சிக்கு வந்த தவெக, இடைத்தேர்தல் மூலம் மக்கள் தொண்டின் முக்கியத்துவம், அவசியத்தை உணர்ந்துள்ளது. ஜனநாயக கடமை ஆற்றிய அதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் மீது பொய் வழக்கு போட்டு, விசாரணை என்ற பெயரிலே தேர்தல் பணியை முடக்க முயற்சித்தனர்.

தவெக ஆட்சியில் அரசு வழக்கறிஞர் நியமனத்துக்கு லஞ்சம், பணி முடிவடைந்தபின் ஒப்பந்தம் அறிவிப்பது, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஒரு மூட்டைக்கு ரூ.70 வரை வசூலிப்பது, டாஸ்மாக் கடைகளிலே ரூ.10-லிருந்து ரூ.50 ஆக அதிகரித்து வசூலிப்பது, பொது விநியோக திட்டத்தில் கொள்முதல் செய்ய பாமாயில் போன்றவற்றில் ஊழல் என, ஒவ்வொரு ஊழலாக வெளிவந்து கொண்டு இருக்கிறது. இடைத் தேர்தலில் விஜய்க்கு மக்கள் மரண பயத்தை காட்டிவிட்டனர்.

இடைத்தேர்தலில் ஆளும் அரசுக்கு எதிராக தீர்ப்பு அமையும் போதுதான், மக்களை மறந்து, விளம்பர வெளிச்சத்தில் தடுமாறும் ஆளும் அரசுக்கு களநிலவர உண்மை யதார்த்தம் புரியும். அதிரடி அறிவிப்புகளை வெளியிடுவது, மக்கள் எதிர்ப்பு தெரிவித்தால் வாபஸ் பெறுவது போன்ற இந்த ஆட்சி மர்ம ஆட்சியாகவே இருக்கிறது. இந்த இடைத்தேர்தல் தீர்ப்பு ஒரு நல்ல பாடமாக, ஒரு நல்ல தீர்ப்பாக ஆளுங்கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சியை வலிமையடைய செய்யும் வகையில் வாக்காளர்கள் கவனமாக இருக்க வேண்டும்." என்று கூறினார்.

## திருப்பூர் ரிதன்யா வழக்கு:

# நகைகளை மீட்டு தந்தையிடம் ஒப்படைக்க காவல்துறைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, அக்.06:** வரதட்சணை கொடுமையால் தற்கொலை செய்து கொண்ட திருப்பூர் இளம்பெண் ரிதன்யாவின் நகைகளை குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் இருந்து மீட்டு, அவற்றை ரிதன்யாவின் தந்தையிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்ட சென்னை உயர் நீதிமன்றம், வழக்கின் விசாரணை அதிகாரியை மாற்ற மறுத்து விட்டது.



திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் வரதட்சணை கொடுமை காரணமாக கடந்த 2025-ம் ஆண்டு ஜூன் மாதம், புதுமணப்பெண் ரிதன்யா விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தொடர்பான வழக்கை விசாரித்த அவினாசி டிஎஸ்பி குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில், வழக்கை முறையாக விசாரிக்கவில்லை என்பதால், எஸ்.பி. அந்தஸ்து அதிகாரியை புதிய புலன் விசாரணை அதிகாரியாக நியமித்து விசாரிக்கக் கோரி, ரிதன்யாவின் தந்தை அண்ணாதுரை ராமசாமி மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அரசியல் செல்வாக்கு உள்ளதால், விசாரணை அதிகாரி முறையாக விசாரிக்கவில்லை; குரலுடன் கூடிய கண்காணிப்பு கேமரா பதிவுகள், மொபைல்கள் உள்ளிட்ட மின்னணு ஆதாரங்களை ஆராயாமல், மெத்தனப் போக்குடன் காவல்துறை செயல்பட்டுள்ளது.

வரதட்சணையாக கொடுத்த நகைகள், காரை சட்டப்படி பறிமுதல் செய்யாததால், சட்ட ரீதியாக இல்லாமல் அவற்றை பெற்றுக் கொள்ளும்படி புலன் விசாரணை அதிகாரி நிர்பந்திக்கிறார். தனது தரப்பு சாட்சிகளை விசாரிக்காமல், முழுமையான விசாரணை நடத்தாமல், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டுள்ளது. அதனால் எஸ்.பி. அந்தஸ்து அதிகாரியை புதிய விசாரணை அதிகாரியாக நியமித்து, விசாரணை நடத்தி, கூடுதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும்" என மனுவில் கோரப்பட்டுள்ளது.

மேலும், வரதட்சணையாக கொடுத்த 100 பவுன் நகை மற்றும் 63 லட்ச ரூபாய் மதிப்பிலான வால்வோ கார் ஆகியவற்றை குற்றம்சாட்டப்பட்டவர்களிடமிருந்து மீட்டுத் தர வேண்டும் என்ற கோரிக்கையை அவினாசி நீதிமன்றம் நிராகரித்த உத்தரவை எதிர்த்தும் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த இரு வழக்குகளையும் விசாரித்த நீதிபதி ஜி.கே. இளந்திரையன், தற்கொலை செய்து கொண்டபோது ரிதன்யா அனுப்பிய ஆடியோ பதிவில் நகைகள் எங்கு உள்ளது என தெளிவாகக் கூறியிருந்தும் அவை மீட்கப்படவில்லை; எனவே குற்றம்சாட்டப்பட்டவர்களிடமிருந்து காவல்துறை நகைகளை மீட்க வேண்டும்; பின்னர் அவற்றை ரிதன்யாவின் தந்தையிடம் ஒப்படைக்க வேண்டும்" என உத்தர விட்டார். மேலும், விசாரணை அதிகாரியை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை நிரகரித்தும் நீதிபதி உத்தர

# நான்கு கோடி ரூபாய் நன்கொடை வழங்கிய முன்னாள் பள்ளி மாணவர்

**தஞ்சாவூர், அக்.07:** தான் படித்த அரசு பள்ளியின் வளர்ச்சிக்கு, நான்கு கோடி ரூபாய் நன்கொடை வழங்கிய, முன்னாள் மாணவரை கிராம மக்கள் பாராட்டினர்.

தஞ்சாவூர் மாவட்டம், ஆம்பலாப்பட்டு இலுப்பை தோப்பு கிராமத்தை சேர்ந்தவர் வாஞ்சிநாதன், 42. தான் படித்த இலுப்பைதோப்பு அரசு மேல்நிலைப்பள்ளியின் வளர்ச்சிக்காக, நான்கு கோடி ரூபாய் நிதியை வழங்கிய நிலையில், முதற் கட்டமாக, 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கூரையுடன் கூடிய கலையரங்கம் கட்டப்பட்டன.

தொடர்ந்து, மீதமுள்ள நிதியில், வகுப்பறைகள், ஸ்மார்ட் கிளாசுக்கு தேவையான சாதனங்களை வாங்க திட்டமிட்டப்பட்டுள்ள, வாஞ்சிநாதனை கிராமமக்கள் வெகுவாக பாராட்டினர்.

இதுகுறித்து, ஓய்வு பெற்ற ஆசிரியர் ராமலிங்கம் கூறியதாவது:

எங்கள் பள்ளியில், 400 மாணவர்கள் படிக்கின்றனர். பள்ளியின் உள் கட்டமைப்பு வசதியை மேம்படுத்த பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் பலரும் மாணவர்களை அழைத்து வர, வேன், 'சிசிடிவி' கேமரா, வகுப்பறை கட்ட நிலம் என



வழங்கியுள்ளனர்.

வாஞ்சிநாதன், தான் படித்த பள்ளியை தனியார் பள்ளிக்கு நிகராக தரம் உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தில், பள்ளியின் வளர்ச்சிக்கு, நான்கு கோடி ரூபாய் வழங்கியுள்ளார். முதற்கட்டமாக கலையரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

கிராமபுற மாணவர்கள் வசதிக்காக பள்ளிக்கு பஸ் ஒன்றை வாங்கவும், நான்கு அறைகள் கொண்ட கூடுதல் வகுப்பறைகள் கட்டவும், எல்லா வகுப்புக்கும் ஸ்மார்ட் கிளாஸ் ஏற்படுத்தவும் திட்டமிட்டு பணிகள் நடந்து வருகிறது.

எங்கள் பள்ளியில் படித்த பலரும், பள்ளிக்கு உதவி செய்துள்ளதால், பள்ளியின் வளர்ச்சி, மாணவர் சேர்க்கை அதிகாரித்துள்ளது என அவர் கூறினார்.

## டாஸ்மாக் கடையை மூடக் கோரி கிராம மக்கள் சாலை மறியல்

**திருவாரூர், அக்.07** மன்னார்குடி அருகே உள்ள துளசேந்திரபுரம் இணைப்பு சாலையில் இருக்கும் டாஸ்மாக் கடையால்பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பல்வேறு இடையூறுகளும், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளும் ஏற்படுவதாக கூறி அப்பகுதி மக்கள் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து வந்தனர்.

ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப் படாததால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் முத்துப்பேட்டை சாலையில் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மதுபானக் கடையை அகற்ற வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். இதனை பரிசீலித்த அதிகாரிகள், ஒரு மாதத்திற்குள் கடையை அகற்றுவதாக உறுதியளித்தனர்.

# கூட்டுறவு நூற்பாலைகளில் தொழிலாளர் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும்

## தமிழ்நாடு பஞ்சாலை தொழிலாளர் சம்மேளனம் - சிஐடியு வலியுறுத்தல்

**விருதுநகர், அக்.07:** தமிழகத்தில் இயங்கி வரும் 6 கூட்டுறவு நூற்பாலைகளில் தொழிலாளர் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு பஞ்சாலை தொழிலாளர் சம்மேளனம் - சிஐடியு சார்பில் போராட்டங்களை முன்னெடுக்க உள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் செயல்பட்டு வரும் 6 கூட்டுறவு நூற்பாலைகளின் சிஐடியு சங்க நிர்வாகிகள் கூட்டம் ஒருங்கிணைப்புக் குழு கன்வீனர் சக்திவேல் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 6 கூட்டுறவு நூற்பாலைகளின் சிஐடியு சங்கத் தலைவர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் 6 கூட்டுறவு நூற்பாலைகளில் நிலவும் தொழிலாளர் பிரச்சினைகள், ஆலைகளின் செயல்பாடு, உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிக்கப் பட்டது.

அதை தொடர்ந்து தமிழகத்தில் பஞ்சாலை தொழிலாளர் சம்மேளனத்தின் சிஐடியு மாநில பொதுச் செயலாளர் அசோகன் அளித்த பேட்டியில், 10 சதவீதத்திற்கும் குறைவாகவே நிரந்தர தொழிலாளர்கள் 6 கூட்டுறவு நூற்பாலைகளிலும் தற்போது பணிபுரியும் தொழிலாளர்களில் நிரந்தர தொழிலாளர்களின் எண்ணிக்கை 10 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது. நூற்பாலை நிர்வாகங்களில் நிலையான தொழிலாளர் சட்ட விதிகள் முறையாகப் பின்பற்றப்படாத நிலை தொடர்கிறது.

20 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் கூட நிரந்தரப்படுத்தப்படாமல் தினக்கூலி தொழிலாளர்களாகவே பணிபுரிந்து வருகின்றனர். இதனால் நீண்டகாலமாக பணியாற்றும் தொழிலாளர்கள் மிகுந்த மனவேதனையுடனும், எதிர்காலம் குறித்த நம்பிக்கையின்மையுடனும் உள்ளனர்.

தேனி அண்ணா கூட்டுறவு நூற்பாலை உள்ளிட்ட சில ஆலைகளில், சட்டப்படி பணியில் சேர்ந்து இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் பணி முடித்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று தொழிலாளர் துறையை அணுகியபோது, தொழிலாளர் துறை நிரந்தரப்படுத்த உத்தரவு வழங்கியுள்ளது.

எனவே, தொழிலாளர் பற்றாக்குறையைப் போக்கவும், தொழிலாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவும், நீண்டகாலமாக பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரையும் சட்டப்படி பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

தொழிலாளர் நியமனத்தில் இடைத்தரகர்கள் கூடாது கூட்டுறவு நூற்பாலைகள் லாபகரமாகவும், தொடர்ச்சியாகவும் இயங்குவதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் போராட்டம் மற்றும் உண்ணாவிரத போராட்டங்களை நடத்த உள்ளதாக தெரிவித்தார்.

## உத்தரபிரதேச தேர்தல் கூட்டணியில் இழுபறி:

# 150 தொகுதிகள் கேட்கும் ராகுல்; 50-க்கு முன்வரும் அகிலேஷ்

**புதுடெல்லி, அக்.07:** உத்தரப் பிரதேச சட்டப் பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 403 தொகுதிகளில் 150 தொகுதிகளை காங்கிரஸ் கோரும் நிலையில், சமாஜ்வாதி கட்சி 50 தொகுதிகளை மட்டுமே வழங்க முன்வந்துள்ளது.

நாட்டிலேயே அதிக சட்டப்பேரவைத் தொகுதிகளைக் கொண்டுள்ள உத்தரப் பிரதேசத்துக்கு அடுத்த ஆண்டு பேரவைத் தேரதல் நடைபெற உள்ளது. இம்மாநிலத்தில், பாஜக தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியில் உள்ளது.

கடந்த தேர்தலைப் போலவே இம்முறையும் சமாஜ்வாதியும் காங்கிரஸும் கூட்டணி வைக்க விரும்புகின்றன. மாயாவதியின் பகுஜன் சமாஜ் தனித்து போட்டியிட இருக்கிறது.

காங்கிரஸ் 100 முதல் 150 தொகுதிகள் வரை கோருகிறது. ஆனால், சமாஜ்வாதி கட்சியோ வெறும் 50 தொகுதிகளை மட்டுமே அளிக்க முன்வந்துள்ளது.

2022 சட்டப்பேரவை தேர்தலுக்காக சமாஜ்வாதி கட்சி ஒரு பெரிய கூட்டணியை அமைத்தது. அதில் காங்கிரஸை தவிர வேறு பல கட்சிகளும் இடம்பெற்றிருந்தன.

2024 மக்களவைத் தேர்தலில், காங்கிரஸுடன் சமாஜ்வாதி மீண்டும் கூட்டணி அமைத்தது. இதில், உ.பி.யின் 80 தொகுதிகளில் 43 இல் இக்கூட்டணி வெற்றி பெற்றது. இதில், சமாஜ்வாதி 37 தொகுதிகளிலும், காங்கிரஸ் 6 தொகுதிகளிலும் வெற்றி பெற்றதால் பாஜகவுக்குப் பெரும் பின்னடைவை ஏற்பட்டது.

2024 மக்களவை தேர்தலுக்குப் பிறகு ராகுல் காந்தியின் செல்வாக்கு உபியில் உயர்ந்து



வருவதாகக் காங்கிரஸ் தலைவர்கள் கூறுகின்றனர். ஆனால், சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ், 'கூட்டணி என்பது தொகுதிகளுக்காக அல்ல வெற்றிக்கானது' என தெரிவித்துள்ளார்.

இச்சூழலில், 2024 மக்கள வைத் தேர்தலில்வெற்றிபெற்றதொகுதிப் பங்கீட்டுக்கான கணக்கீடுகள் காட்டப்படுகின்றன. 2024 தேர்தலில் காங்கிரஸ் 80 மக்களவைத் தொகுதிகளில் 17 இல் போட்டியிட்டு 6 இல் மட்டுமே வெற்றி பெற்றதை சமாஜ்வாதி சுட்டிக்காட்டு கிறது. சராசரியாக ஒரு மக்களவைத் தொகுதிக்குள் 5 சட்டப்பேரவைத் தொகுதிகள் அடங்கியிருக்கும் என்பது சமாஜ்வாதி கட்சியின் கணக்கீடு.

அதன்படி, காங்கிரஸ் வெற்றி பெற்ற 6 மக்களவைத் தொகுதிகளுக்குள் வரும் 30 சட்டப்பேரவைத் தொகுதிகளை அக்கட்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது அகிலேஷின் நிலைப்பாடாக உள்ளது.

இந்நிலையில், சமாஜ்வாதி கட்சி கணக்கீடுகளின் அடிப்படையிலேயே காங்கிரஸும் தனது கணக்கீடுகளை முன்வைத்துள்ளது. இந்தக் சூத்திரப்படி, 2024 மக்களவைத் தேர்தலில் சமாஜ்வாதி 37 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. இதன்படி, ஒரு மக்களவைத் தொகுதிக்கு ஈடாக 5 சட்டப்பேரவைத் தொகுதி கள் வழங்கப்பட்டால், சமாஜ்வாதி கட்சிக்கு 185 இடங்கள் கிடைக்கின்றன.

அதன்படி, சமாஜ்வாதி 185 தொகுதிகளிலும், காங்கிரஸ் 30 தொகுதிகளிலும் போட்டியிட்டால் மொத்தம் 215 என்றாகிறது. மீதமுள்ள 188 தொகுதிகளின் நிலை என்ன? என காங்கிரஸ் கேள்வி எழுப்புகிறது.

இதன் காரணமாக, உ.பியின் தொகுதிப் பங்கீடு மற்றும் கூட்டணிகள் விவகாரத்தில் சமாஜ்வாதி கட்சி தொடர்ந்து காங்கிரஸை விமர்சித்து வருகிறது. அதோடு, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தொடர்பான இண்டியா கூட்டணி கூட்டத்திலும் அகிலேஷ் கலந்து கொள்ளாமல் தன் பிரதிநிதியை அனுப்பியிருந்தார்.

சமாஜ்வாதி - காங்கிரஸ் தலைவர்களுக்கு இடையே மோதல் அறிக்கைகள் துவங்கி விட்டன.

Owned, Printer and Published by G.SASIREKA. Published from No:28, 2nd Avenue, Ashok Nagar, Chennai-83 Printing at Annai Abirami Achagam, No. 24, Vengu Chetty Street, Punga Nagar, Chennai - 600 003. Editor: S. SENTHILKUMAR, Office: No:9, 4th Block, Veeramamunivar Street, Mogappair East, Chennai - 37.